**செ.வெ.எண்:39** **நாள்:16.05.2017**

## பத்திரிக்கைசெய்தி

**கரூர் மாவட்டத்தில் தாட்கோதிட்டத்தின் கீழ் (என்.எஸ்.எப்.டி.சி,என்.எஸ்.கே.எப்.டி.சி) கடன் பெற்றுள்ளபயனாளிகளுக்குஅபராதவட்டிதள்ளுபடிசெய்யப்படஉள்ளது.**

**சம்மந்தப்பட்டவர்கள் பயன்பெறதிரு.கு.கோவிந்தராஜ் இ.ஆ.ப.,மாவட்டஆட்சியர் அழைப்பு**

தாட்கோ மூலம்தேசியதாழ்த்தப்பட்டோர் நிதிவளர்ச்சிகழகம் (NSFDC) மற்றும் தேசியதுப்புரவுத் தொழிலாளர் நிதிமற்றும் வளர்ச்சிகழகம் (NSKFDC) ஆகியதிட்டங்களில்கடன் பெற்றபயனாளிகள் பருவக் கடன் அசல்,வட்டிமற்றும் அபராதவட்டிபோன்றவற்றைதாட்கோவிற்குதிரும்பசெலுத்த இயலாதகாரணத்தினால் கடன் தொகைநீண்டகாலமாகநிலுவையில் உள்ளதால்,அபராதவட்டியைமட்டும் தள்ளுபடி செய்ய அரசு திட்டமிட்டு தாட்கோவிற்கு பருவக் கடன்அசல் மற்றும் வட்டித் தொகையினை ஒரு தவணையாகவோ அல்லது மூன்று சமதவணையாகவோ செலுத்தும் பயனாளிகளுக்கு அபராத வட்டித் தொகை தள்ளுபடி செய்யப்படும் எனஅரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே கரூர் மாவட்டத்தில் தகுதி வாய்ந்த ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்த என். எஸ்.எப்.டி.சி, என்.எஸ்.கே.எப்.டி.சி திட்டத்தில் கடன் பெற்ற பயனாளிகள் அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஒருவருட காலத்திற்கு மட்டுமே அபராதவட்டி தள்ளுபடி செய்யும் திட்டம் அமுலில் இருக்கும். பருவக் கடனில் அசல் மற்றும் சாதாரண வட்டித் தொகையினை ஒரு தவணையாகவோ அல்லது மூன்று சமதவணையாகவோ செலுத்த வேண்டும். பயனாளிகள் அவர்களின் விருப்பத்தினை எழுத்துபூர்வமாக தெரிவிக்க வேண்டும். மேலும் அபராத வட்டித் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்.கடன் தொகை (பருவகடன்அசல்,வட்டி) முழுவதுமாக செலுத்தப்பட்டவுடன் கடன் கணக்கு முடிக்கப்பட்டு துணை பிணையம் கடனாளிக்கு விடுவிக்கப்படும். ஏற்கனவே அபராத வட்டி செலுத்தியிருப்பின் அத்தொகையை திருப்பி வழங்கவோ அல்லது தற்போதுள்ள நிலுவையில் உள்ள கடன் தொகையில் சரிக்கட்டவோ இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி அபராதவட்டி தள்ளுபடி சலுகையினை பெற்று கரூர் மாவட்ட மக்கள் பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ் இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**